பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 04 2024 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 88 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று நிறைவடைந்தது.

2. **VVPAT** ஒப்புகை சீட்டுகளை 100 சதவீதம் சரிபார்க்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பினை உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

3. மக்கள் நலனில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்கு அக்கறை இல்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ritik** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

மக்களவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 88 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைந்தது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

மணிப்பூரில் உள்ள மக்களவைத் தொகுதியின் இரண்டாவது பகுதிக்கும் அன்றைய தினம் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கர்நாடகாவில் முதல்கட்டமாக 14 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. மனோஜ்குமார் மீனா கூறியுள்ளார்.

பெங்களூருவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அம்மாநிலம் முழுவதும் 30 ஆயிரத்து 602 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதில் 19 ஆயிரத்து 701 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு வெப்கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுவதாக அவர் கூறினார்.

பதற்றமளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ள ஆயிரத்து 370 வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வாக்குச்சாவடிகளுக்கு உள்ளேயும், வெளியேயும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

துணை ராணுவப் படையினரின் 65 கம்பெனிகளும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்காக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. மனோஜ்குமார் மீனா தெரிவித்தார்.

இந்த மாநிலத்தில் எஞ்சியுள்ள 14 தொகுதிகளுக்கு, அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கேரளாவில் ஒரே கட்டமாக 20 தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை ஒட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சஞ்சய் கவுல் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 25 ஆயிரத்து 358 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

2 கோடியே 77 லட்சம் வாக்காளர்கள் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றவுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்துள்ளதால், அது தொடர்பான நெறிமுறைகளை அனைத்து அரசியல் கட்சிகளும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று திரு. சஞ்சய் கவுல் கேட்டுக் கொண்டார்.

ராஜஸ்தானில் மொத்தம் உள்ள 25 தொகுதிகளில், இரண்டாம் கட்டமாக 13 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்ட்ராவில் தலா 8 தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசத்தில் 7 தொகுதிகளிலும், அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா 5 தொகுதிகளிலும், மேற்கு வங்கம் மற்றும் சத்திஷ்கரில் தலா 3

தொகுதிகளிலும், திரிபுராவில் ஒரு தொகுதியிலும் மற்றும் ஜம்மு காஷ்மீரிலும் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக கடந்த 19ஆம் தேதி தொடங்கி, ஜூன் மாதம் 1ஆம் தேதிவரை தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை விவிபேட் இயந்திரத்தில் பதிவான ஒப்புகை சீட்டுடன் 100 சதவீதம் ஒப்பிட்டு சரிபார்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பினை உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இதுதொடர்பாக சில தொழில்நுட்ப விளக்கங்களை தேர்தல் ஆணையத்திடமிருந்து பெற்ற பின்னர், நீதிபதிகள் திரு. சஞ்சீவ் கன்னா, திரு. திபாங்கர் தத்தா அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

>>>><<<<

மக்கள் நலனில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்கு அக்கறை இல்லை என்று பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

பீகாரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தீவிரவாதத்தை ஒடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பின்னர், தீவிரவாதம் மற்றும் நக்ஸலைட் பிரச்சினை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>><<<<

மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ராவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாகவும் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

>>>><<<<

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதில் வனப்பாதுகாப்பு முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சி மையத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் பேசினார்.

வனங்களின் முக்கியத்துவத்தை மனிதகுலம் மறந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

வனங்களை பாதுகாப்பதில் வனத்துறை அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

பஞ்சாயத்ராஜ் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடரும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய பஞ்சாயத்துராஜ் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இதனை தெரிவித்துள்ளார்.

மக்களின் கனவுகளை நனவாக்குவதில் பஞ்சாயத்ராஜ் அமைப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய பஞ்சாயத்ராஜ் துறையின் செயலர் திரு. விவேக் பரத்வாஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உள்ளாட்சித் தேர்தல்களை முறைப்படுத்தியது இந்த துறையின் சாதனையாகும் என்றும் திரு. பரத்வாஜ் தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியா - ஜப்பான் இடையே, ஆயுதங்களை கைவிடுவது தொடர்பான 10வது சுற்று ஆலோசனைக் கூட்டம் இன்று டோக்கியோவில் நடைபெற்றது.

ஆயுதங்களை குறைப்பது தொடர்பாக பரஸ்பரம் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குறிப்பாக, அணுஆயுதங்களை குறைப்பது, ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது போன்றவை குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>><<<<

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில், விமான கடத்தல் தடுப்பு ஒத்திகை இன்று நடைபெற்றது.

சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பின் உத்தரவுப்படி, இதுபோன்ற தடுப்பு ஒத்திகை ஆண்டுதோறும் நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ritik** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

துபாயில் இன்று தொடங்கிய இப்போட்டியின், ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>><<<<

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Shanghai-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, 235-233 என்ற புள்ளிக்கணக்கில் தென்கொரியாவை வென்றது.

மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 235-230 என்ற புள்ளிக்கணக்கில் **Estonia-**வை வென்றது.

>>>><<<<

**U.S. Open Pickleball** சாம்பியன் போட்டியில் இந்தியா, மூன்று தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**Florida**–வில் நடைபெற்ற இப்போட்டியின் ஒற்றையர் பிரிவுகளில் **Stavya Bhasin, Dhiren Patel** மற்றும் **Hemal Jain** தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவுகளில் 2 வெள்ளிப்பதக்கங்களையும், ஒற்றையர் பிரிவில் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

>>>><<<<

**Georgia** சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜார்ஜியாவின் **Ekaterine Gorgodze** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 5-7, 10-7 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் **Kira Pavlova – Aglaya Fedorova** இணையை வென்றது.

**>>>><<<<**

உலக தடகள தொடர் ஓட்டப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட இந்த அணியில் **Amoj Jacop, Muhammad Anas Yahaya, Rajesh Ramesh** உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

**>>>>END<<<<**